# பத்திரிக்கைசெய்தி

தென்காசி மாவட்டம், வீரகேரளம்புதூர் தாலுகா கலிங்கப்பட்டியை கிராமத்தை சேர்ந்த S.குமாரவேல் என்பவர் தனக்கு பூர்வீக பாத்தியமான தனது தந்தையின் பெயரில் உள்ள இராஜகோபாலகேரி கிராமநத்தம் சர்வே எண்.30-ல் உள்ள1.27 ஏர் பரப்பில் உள்ள வீட்டிற்கு பட்டா பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக 06.01.2025 ஆம் தேதி அன்று இராஜகோபாலபேரி கிராம நிர்வாக அலுலகத்திற்கு சென்று VAO பத்மாவதி அவர்களை சந்தித்த போது அவர் வீரகேரளம்புதூர் தாலுகா அலுவலகத்தில் இ-சேவை மையத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்க சொன்னதாகவும், அன்றைய தினமே ஆன்லைனில் விண்ணப்பித்ததாகவும், பின்னர் 08.01.2025 ஆம் தேதி இராஜகோபாலபேரி VAO பத்மாவதி அவர்களை பார்த்து பட்டா பெயர் மாற்றத்திற்கு ஆன்லைனில் விண்ணபபித்ததாக தெரிவித்ததாகவும், அதற்கு VAO பத்மாவதி ஆன்லைனில் விண்ணப்பம் செய்தபோது கொடுக்கப்பட்ட ஆவணங்களின் நகல்களை கேட்டதாகவும், அந்த நகல்களை 09.01.2025 ஆம் தேதி இராஜகோபாலபேரி VAO பத்மாவதியை சந்தித்து ஆவணங்களை கொடுத்ததாகவும், அப்போது VAO பத்மாவதி பட்டா மாறுதலுக்கு ரூ.10,000/- செலவு ஆகும் என்று சொன்னதாகவும், புகார்தாரர் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்று கூறியதாகவும், அதற்கு ரூ.5,000/- லஞ்சமாக கொடுக்குமாறு கூறியதாகவும், அதற்கு குமாரவேல் அவ்வளவு பணம் இல்லை கஷ்டமாக இருப்பதாக கூறியதால் ரூ.4,500/- தந்தால் தான் பட்டா பெயர் மாற்றம் செய்துதர முடியும் என்றுகறாறாக கூறியுள்ளார். S.குமாரவேலு என்பவருக்கு பட்டா மாறுதல் செய்ய VAO-க்கு ரூ.4,500/- தர விருப்பம் இல்லாத காரணத்தால் தென்காசி லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுத்தார். அதன்பேரில் தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் இராஜகோபாலபேரி VAO திருமதி.பத்மாவதி என்பவர் மீது 20.01.2025-ம் தேதி குற்றவழக்கு பதிவு செய்து அதன் தொடர்ச்சியாக 21.01.2025-ம் தேதி நடத்தப்பட்ட பொறிவைப்பு நடவடிக்கையின் போது VAO திருமதி.பத்மாவதி, இராஜகோபாலபேரி கிராமம் என்பவர் பட்டா மாறுதலுக்காக S.குமாரவேல் என்பவரிடமிருந்து ரூபாய் 4,500/- பணத்தை லஞ்சமாக பெற்றபோது அங்குமறைந்திருந்த தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.